**செய்தி வெளியீடு எண்: 908** **நாள்: 12.12.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (12.12.2018) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 3 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவாடானையில் கட்டப்பட்டுள்ள கிடங்குடன் கூடிய அலுவலகக் கட்டடம், மதுரை மற்றும் விருதுநகரில் கட்டப்பட்டுள்ள 2 வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

விவசாயிகளின் நலன்களில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தித் திறனில் உள்ள இடைவெளியை உரிய பண்ணை அணுகுமுறை மூலம் குறைத்து, உணவு உற்பத்தியை பெருக்குவதற்கும், வேளாண் விளைபொருட்களின் அறுவடைக்கு பின் பதப்படுத்தும் கட்டமைப்புகளை மேம்படுத்தி, சந்தை இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கச்செய்து அவர்களின் வருமானத்தை கணிசமாக உயர்த்தி, தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நபார்டு நிதியுதவி திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் 1 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு மற்றும் அலுவலகக் கட்டடம்; மதுரை மற்றும் விருதுநகரில் 1 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வேளாண்மை பொறியியல் விரிவாக்க மையக் கட்டடங்கள்;

என மொத்தம் 4 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வேளாண்மைத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

வேளாண் பொருட்களின் மதிப்பைக் கூட்டி வீணாவதைக் குறைக்க, வலுவான மற்றும் திறன்மிக்க உணவு பதப்படுத்தும் தொழில் மையங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. உணவு பதப்படுத்தும் தொழிலின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்க, 2018–2019 ஆம் ஆண்டில் சிறப்பு உணவு பதப்படுத்தும் கொள்கை தமிழ்நாடு அரசால் வெளியிடப்படும் என்று 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட உரையில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, வேளாண்மைத் துறையின் சார்பில் தயாரிக்கப்பட்ட “தமிழ்நாடு உணவுப் பதப்படுத்தும் கொள்கை – 2018” புத்தகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வெளியிட, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு அவர்கள் பெற்றுக் கொண்டார்.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல், உணவுப் பொருட்கள் வீணாவதை குறைத்தல், பண்ணைப் பொருட்களின் மதிப்புக் கூட்டுதல் போன்றவை தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் கொள்கை 2018–ன் குறிக்கோள்களாகும். இக்கொள்கை வேளாண் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதுடன், தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு உரிய வசதி வாய்ப்புகளை அளிக்கும்.

தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் கொள்கை 2018–ல் நிலம், நீர், மின்சாரம், முதலீட்டு மானியம், வட்டி மானியம், மகளிர் / ஆதிதிராவிடர் / பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு கூடுதல் வட்டி மானியம், வரி ஊக்கத் தொகை, முத்திரைக் கட்டண விலக்கு, சந்தைக் கட்டண விலக்கு, சந்தைப்படுத்துதலில் உதவி, தரச்சான்று, போக்குவரத்து வசதி, ஏற்றுமதி ஊக்கத் தொகை, திறன் மேம்பாட்டு பயிற்சி, ஆராய்ச்சி மேம்பாட்டு ஆய்வகங்கள் அமைத்தல், ஒற்றைச் சாளர வசதி, தொழிலாளர்களுக்கான சலுகைகள் போன்ற சலுகைகள் முன்மொழியப்பட்டுள்ளன. உணவு பதப்படுத்தும் கொள்கையின்படி தமிழ்நாடு அரசு, உணவு பூங்காக்கள் அமைத்து தொழில் முனைவோர்கள் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கு வழிவகை செய்யும்.

மேலும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, உணவு பதப்படுத்தும் கொள்கையினை செயல்படுத்தும் முகமையாக திகழும். இத்துறை, இதர துறைகள், மத்திய அரசு மற்றும் இதர நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயல்பட்டு, மத்திய அரசு மானியங்கள் மற்றும் இக்கொள்கையின் மூலம் பெறக்கூடிய நிதி உதவிகள் ஆகியவற்றை உணவு பதப்படுத்துவோர்கள், தொழில்முனைவோர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் பெறுவதற்கு வழிவகை செய்யும். இக்கொள்கை, உணவு பதப்படுத்தும் பிரிவில் தனியார் நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கான வாய்ப்பினை அதிக அளவில் ஏற்படுத்தித் தரும். மேலும், உணவு பதப்படுத்தும் பிரிவில் அதிக அளவிலான வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதுடன், விவசாயிகளுக்கு சிறந்த விலை கிடைக்கச் செய்து, தரமான வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை, பால்வளம் மற்றும் மீன்வள பொருட்களின் உற்பத்தியினை அதிகப்படுத்துவதற்கும் வழிவகுக்கிறது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு பால்வளம் மற்றும் பால்பண்ணை வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.டி.ராஜேந்திரபாலாஜி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.பா. பாலகிருஷ்ணா ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறை ஆணையர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.வெ. சந்திரசேகரன், இ.ஆ.ப. வேளாண்மைத் துறை இயக்குநர் திரு.வி. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 12.12.2018**